முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1528

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.12.2023,** செவ்வாய்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
   ஓங்கார மகா சக்தியே
   ஓங்காரன் யானே உன்னுள் இருக்க
   ஓங்காரக்குடில் படைத்து அருளும் மாதவராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
   அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
   வரமென ஞான அறிவுரை ஆசி
   வழங்குவேன் சோபகிருது தேள்திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 19 ம் நாள், 05.12.2023, செவ்வாய்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் தர்மம்
   தரணியை ஆளுவது உறுதியப்பா
   மன்னவனாய் அரங்கன் பேரிலே
   மக்களுக்கு ஞான ஆட்சி அமைவதும் உறுதியப்பா
4. உறுதி தந்தேன் அரங்கன் தொண்டர்படை
   உலகத்தை மீட்டு ஞான வழி
   ஆறுமுக அவதார ஞானி வந்த
   அற்புதமான நோக்கத்தை பூர்த்திசெய்ய
5. செய்யவே ஞானபலம் கூட்டி
   ஜெகமெல்லாம் தொண்டர் படைகளை
   ஐயன் முருகன் யான் உருவாக்குவேன்
   ஆற்றலான ஞானப்படை அமைப்பேன்
6. அமைக்கவே அரங்கனால் இந்த மாற்றம்
   அகிலத்தில் நடக்க இருக்கவே
   சிந்தைவைத்து உலகோர் அரங்கனின்
   சேவடி போற்றிட உலகமெல்லாம்

7. விந்தைபட ஆறுமுகன் இறங்கியே
வெற்றிவேல் ஞானக்கொடியேற்றி
ஆற்றல்பட ஞானவான்கள் களமிறங்க
அரசியல் மாற்றமும் யானே புரிவேன்

8. மாற்றத்தை அரங்கன் வழி யானே
மகா அவதாரமாக நிகழ்த்தி இருக்க
ஆற்றலோடு அரங்கனை நம்பி வந்தால்
அகிலத்துக்கு அற்புதம் நிகழக்கூடும்

9. கூடவே ஞானத்தை அரங்கன் வழி
குவலயமெல்லாம் விதையாக விதைத்துள்ளேன்
நாடவே உலகோர்க்கு நன்மை கிட்டும்
நாடெங்கிலும் ஞான ஆட்சி மலரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–